[1974 மார்ச் 20

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மண்டபத்தை அப்படிப்பட்ட நிலையமாக ஆக்கலாமா என்பது தான் கேள்வி. செம்பரம்பாக்கத்தைப் பற்றிய கேள்வி அல்ல இது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்

* 516 வினா—திரு. என். கிட்டப்பா

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதி சின்னமுட்டத்தில் மீன்பிடிக்கும் துறைமுகம் அமைத்திட மத்திய அரசிடம் நமது மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெங்களூரிலுள்ள முன்னேடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் நில ஆய்வு நடத்தி அங்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான அறிக்கையை சென்னை மீனளத்துறை இயக்குநருக்கு அனுப்பியிருக்கிறது. பொதுப் பணித்துறையிடமிருந்து வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை மீனளத்துறை இயக்குநர் எதிர் நோக்கியுள்ளார். பொதுப்பணித் துறையிடமிருந்து விரிவான மதிப்பீடுகளையும் வரைபடங்களையும் பெற்றவுடன் பணியினை மேற்கொள்வதற்காக இந்திய அரசின் நிர்வாக ஏற்பளிப்பைப் பெறுவதற்காக அவை இந்த அரசுக்குப் பணிந்தனுப்பப்படும் என மீனளத்துறை இயக்குநர் கூறுகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை எப்பொழுது அரசுக்குக் கிடைத்தது? இவ்வளவுநாள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம்? விரைவில் முடிக்க அரசாங்கத்தால் என்ன முயற்சி எடுக்கப்பட்டது?

1974 மார்ச் 20]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1972-லே Pre-Investigation Organisation, முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் முடிவு எடுத்தார்கள். நான் முதலில் சொன்னதைப்போல் பொதுப்பணித்துறை மூலம் வரை படங்கள் இன்னும் தயார் செய்யப்படவில்லை. அவைகள் வந்ததற்குப் பிறகு இதை விரைவில் எடுத்து நடத்த முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, சின்ன முட்டத்தை அடுத்த கன்னியாகுமரி பகுதியிலே அதிகமாக மீன் கிடைக்கின்ற மீன் மடை என்று சொல்லப்படும் அளவில் எப்பொழுதும் மீன் கிடைக்கும் நிலப்பாடுகள் இருக்கின்றன. எனவே, உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு இதை அமலாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மதிப்பீடுகளும், வரை படங்களும் பொதுப்பணித் துறை யிலிருந்து இந்தத் துறைக்கு வந்தவுடன் இந்தத் துறை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்.

இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம்

* 517 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம் அமைப்பதில் சிக்கல் ஏதேனும் இருந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) தற்போது மேற்படி படகு கட்டும் தளம் எங்கே நிறுவப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) & (உ) போர்நினைவுச் சின்னத்திற்கருகில் கூவம் ஆற்றிற்கு வடக்கே இரும்பு, சிமிட்டிப் படகு கட்டும் தளத்தை அமைப்பது பொருத்த மற்றதெனக் கருதப்பட்டு அச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதால்,

TRUTH ALONE TRIUMPHS